அசல் வழக்கு எண்.174/2020 வா.சா.1 தினேஷ் த/பெ செல்வம்

**24.01.2024 - 1 மற்றும் 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 2/12டி பிள்ளையார் கோவில் தெரு, சிததேரியில்குடியிருந்து வருகிறேன் எனக்கு 18 வயது எப்போது பூர்த்தி அடைந்தது என்றால் மார்ச் 2020ல் பூர்த்தி அடைந்தது. இந்த வழக்கு 2020ல் தாக்கல் செய்தேன். எந்த மாதம் என்று நினைவில்லை, எனக்கு குடும்ப அட்டை உள்ளது. அந்த குடும்ப அட்டையில் என் அப்பா,அம்மா பெயர், என் பெயர், என் தம்பி மற்றும் தங்கை பெயர் உள்ளது. நானும் என்அப்பா அம்மா தம்பி மற்றும் தங்கையுடன் ஒன்றாக தான் வாழ்ந்து வருகிறேனா என்றால் இல்லை. நானும் என் தம்பியும் தனியாக வாழ்ந்து வருகிறோம்.

2, என் அப்பா, அம்மா வீட்டு எண்.2/12டி-ல் தான் குடியிருந்து வருகிறார்களா என்றால் சரிதான். நான் என் அப்பா அம்மாவிடமிருந்து பிரிந்து எத்தனை மாதங்கள் தனியாக வசித்து வருிகிறேன் என்றால் மாதங்கள் என்னால் சொல்ல முடியாது. நான் பிளஸ் டூ படித்ததிலிருந்து அவர்களை விட்டு பிரிந்து தான் வாழ்ந்து வருகிறேன். பிளஸ் டூ படித்து கொண்டிருக்கும் போதே நான் என் அப்பா,அம்மாவை விட்டு பிரிந்து வந்துவிட்டேன். நான் 17 வயதில் என் அப்பா அம்மாவை விட்டு பிரிந்து வந்தேனா என்றால் சரிதான். இன்று என் அப்பா அம்மா ஆரணிக்கு வந்தார்களா என்றால் இல்லை. என் அப்பா அம்மாவை நான் அழைத்து வரவில்லை என்றால் நான் எதற்காக அவர்களை அழைத்து வரவேண்டும். இந்த வழக்கை என் அப்பா அம்மா சொல்லிதான் நான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

3. இந்த வழக்கை நான் யோகானந்தம், காந்திமதி, செல்வம் மற்றம் ஜெயா ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா அம்மா இந்த வழக்கில் ஆஜராகி எனக்கு எதிராக இந்த வழக்கை நடத்துகிறார்களா என்றால் எனக்கு தெரியாது. இதுவரையில் இல்லை. நான் வீட்டை விட்டு செல்லும்போதுஎன் தம்பியையும் அழைத்து சென்றுவிட்டேன். என் தம்பிக்கு தற்போது 15 வயது. பிளஸ் டூ படித்து வருகிறார். நான் என் தம்பியை அழைத்து செல்லும்போது அவர் 8ம் வகுப்பு அல்லது வேறு வகுப்போ படித்து கொண்டிருந்தார். அப்போது என் தம்பி விளை கிராமத்தில் உள்ள பள்ளியில் படித்துவந்தார். இந்த வழக்குதாக்கல் செய்தபிறகு தான் என் தம்பி 10ம் வகுப்பு முடித்தார் என்றால் சரிதான் . என் தம்பியின் 10ம் வகுப்பு கல்வி சான்றை என் அப்பா அம்மாஇருவரில் ஒருவர் தான் என் தம்பிக்கு பாதுகாவலராக கையெழுத்து செய்து பெற்றார் என்றால் சரிதான். அதேபோல் நான் பிளஸ் டூ முடித்தபிறகும் எனது கல்வி சான்றை என் அப்பா அம்மாதான் கையெழுத்து செய்து பெற்றார்கள் என்றால் சரிதான்.

4. நானும் என் தம்பியும் என் அப்பா அம்மாவைவிட்டு பிரிந்து வாழ்வதாக வாய்மொழியாக தான் சொல்கிறேன் என்றும் ஆனால் அதற்கு சட்ட பூர்வமான ஆவண ஆதாரம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா என் பெயரிலும் என் தம்பி பெயரிலும் எழுதி வைத்த உயில் சம்மந்தப்பட்ட சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து புன்சை நிலமாகும். அதன் சர்வே நெம்பர் ஞாபகம் இல்லை. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்திற்கு நான்கு பக்க ஜக்பந்திகள் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. அதனால் நான் எந்த சொத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. யோகானந்தம் சித்தேரியை சேர்ந்தவர். நானும் சித்தேரியில் தான் உள்ளேன். யோகானந்தம் என் பக்கத்து தெருவில் உள்ளார். எந்த ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை நான்

தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயில் ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். அந்த உயில் 1996ல் எழுதப்பட்ட ஆவணம் ஆகும். 6ம் மாதம் என்று நினைக்கிறேன். தேதி தெரியாது. அசல் உயில் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அசல் உயில் ஆவணத்தை வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயிலின் நகல் வைத்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த உயிலை யார் எழுதியது என்றும் யார் யார் சாட்சி கையெழுத்துக்கள் போட்டார்கள் என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் சொல்கிறார் என் தாத்தா அந்த உயிலை எழுதினார் என்று.

6. நான் 2002ம் ஆண்டு பிறந்தேன். என் தாத்தா எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு நினைவில்லை. என் தாத்தாவை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உயிலின் சான்றிட்ட நகலில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விவரத்தை இதுநாள் வரையில் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளவர்களை யார் என்று தெரியாது என்பதால் அவர்களை நான் விசாரிக்க போவதில்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் சொல்கிறார் கேள்வி எனக்கு புரியவில்லை என்று. சாட்சியிடம் மீண்டும் அதே கேள்வியை வழக்கறிஞர் கேட்டபோது உயில் சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று சாட்சியம் அளித்தார். அந்த சாட்சிகளின் பெயர் சொல்ல முடியுமா என்றால் சாட்சிகளை யார் என்று தெரியாது. ஆனால் அவர்களை விசாரிக்க போகிறேன்.

7. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில்தான் கடைசி உயில் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. அது தான் கடைசி உயில் ஆகும். அசல் உயில் ஆவணம் என் அத்தை எடுத்து சென்று விட்டார். என் அத்தை பெயர் சாந்தி ஆகும். அவரது கணவர் பெயர் ராஜேந்திரன் அவர்கள் பெங்களூரில் உள்ளார்கள். எனக்கு மற்றொரு அத்தை உள்ளார். அவர் பெயர் புனிதா. அவர் சென்னையில் உள்ளார்.

( வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)